ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# கெருடபத்து.

## கஜேந்திரமோக்ஷக்கீர்த்தனை

சுத்தப்பிரதி.



ச-ம் பதிப்பு.

சென்னை
ஸ்ரீமாதவவிலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை] 1905. [பை-ங.

உ

கடவுள்துணை.

# கெருடப்பத்து.

ஓம்பூரணனே பதினாறு திங்கட்சேரும்
பொருந்தியே யருக்கன் பதினெட்டுஞ்சேருங்
காரணனே கருமுகில்போன் மேனிசேருங்
கருணைபெரு மஷ்டாட்சரங் கலந்துவாழும்
காரணனே லட்சுமியோ டெட்டுஞ்சேரும்
மதிமுகம்போல் மின்றிலங்கும் மாயாநேயா
ஆரணனே ரகுராமா கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. ௧

மந்திரமோ டஷ்டசித்து மெட்டுஞ்சேரும்
வாழ்கிரக மொன்பதுமே வந்துசேரும்
கந்திருவர் கணநாதராசிவர்க்கம்
கலக்கியான நால்வேதங் கலந்துவாழும்
நந்திமுதற் றேவர்களுங் கவனயோகம்
நமஸ்கரித் துன்பாதம் நாளும்போற்ற
அந்தரமாய் நிறைந்திருக்குங் கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே ௨

மூலமுத லோரெழுத்து நீர்தானாகும்
மூன்றெழுத்து மைந்தெழுத்து மொழியலாமோ
சிலமுதல்-ஓம்-அங்-உங்-மங்-றிங்கென்றே
சிவனுடைய திருநாமம் நீர்தானாகும்
நாலமுதல்-ஓம்-அங்-உங்-மங்-றிங்கென்றே
கருணைபெரு மிவ்வெழுத்து நீர்தானாகும்

ஆலவிஷந் கையேந்துங் கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே.
நவ்வென்றும் லிவ்வென்றும் ஓம்சிவாயமென்றும்
நமநமசிவசிவ ராராவென்றும்
சவ்வென்றும் ஓங்கார ரீங்காரமாகித்
தவமுடைய விவ்வெழுத்து நீராளுகும்
ஒவ்வென்றும் ஓம்நமோ நாராயணாவென்று
உன்பாத முச்சரித் துகந்துபோற்ற
அவ்வென்று நகுராமா கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. ௪

உதிக்கின்ற சிவசொரூப முனக்கேயாகும்
ஓம்-அவ்வும் உவ்வுங்-கிலியுமென்றே
பதிக்கிசைந்த ஐந்தெழுத்தை வெளியில்விட்டே
பச்சைமுகில் மேன யமேன பணித்தேனுன்னை
விதிக்கிசைந்த மெய்ப்பொருளே அரிகோவிந்தா
விளக்கொளிபோல் மெத்தவமே விரும்பித்தாதா
அதற்கிசைந்த நடம்புரியுங் கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. ௫

வேதமுத லாயிருந்த சிங்கரூபம்
விளங்குகின்ற விரணியனைவதையேசெய்தாய்.
பூதமுத லாம்பிறவும் புண்யநேயா
புகழ்ந்தவற்குத் துணைவருவாய் சோதைபுத்ரா
நாதமுதல் விந்துவா யுலகுக்கெல்லாம்
ஜயம்பெறவே நிறைந்திருக்கும் வாதபிர்ம
[illegible]வள்போல் நிறைந்திருக்குங் கெருடன்மீதில்

அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே, ௬
முக்கோண நாற்கோண மொழிந்தைங்கோண
முக்கூடரே யறுகோண மெண்கோண மாகும்
சட்கோணநாற்பத்து மூன்றுகோணம்
தந்திரமுஞ் சிதம்பரமுஞ் சகலசித்தும்
இக்கோண மிதுமுதலாய் வகாரமட்டும்
இறையவனைத் தானிருந்து ரட்சித்தாலும்
அக்கோண மீதிருந்து கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந்தருள்செய்வாயே. ௭
பச்சைமுகில் மேனியனே யுனக்கேயிந்தப்
பார்தனிலே பத்தவ தாரமுண்டு
மச்சமென்றுங் கூர்மமென்றுங்வராகமென்றும்
வாமனென்றும் ராமனென்றும் பவுத்தனென்றுந்
துட்டரை யடக்கிமோகினி வேடங்கொண்டாய்
தோன்றியுன் சொரூபமெல்லாமறிவாருண்டோ
அச்சந்தீர்த் தெனையாளக் கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. ௮
வேதியனைத் தோன்றிவந்தாய் மாபலிக்கு
விண்ணவர்க்காய் நரசிங்க ரூபமானாய்
சாதியிலே ராகவனைக் கிருஷ்ணனைத்
தானுதித்து வந்திருந்தாய் தரணிவாழ்க
சோதனைகள் பார்த்திடுவோர் துதிப்போர்தம்மைத்
துஷ்டரையும் வதைசெய்து லோகமாள்வாய்
ஆதிமுதலோரெழுந்தே கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே, ௯

மாயவனே ரகுராமா அருகேவாவா
வஞ்சனைகள் பறந்தோட நெஞ்சில்வாவா
காயாம்பு நிறமுடனே கனவில்வாவா
கருமுகில் மேனியனே யென்கருத்தில்வாவா
நாயகனே யென்னுவி லிருக்கவாவா
நாடோறு முன்பாதந் துதிக்கவாவா
ஆயர்குலத் துதித்தவனே கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. ௰

முப்புரத்தை யெரித்தவனே இப்போவாவா
முகில்நிறனே ஜெகந்நாதா முன்னேவாவா
எப்பொழுதுந் துதிப்பவர் பங்கில்வாவா
ஏழைபங்கி லிருப்பவனே இறங்கிவாவா
ஒப்பிலா மணிவிளக்கே யொளிபோல்வாவா
ஓம்நமோ நாராயணா வுகந்துவாவா
அப்பனே ரகுராமா கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. ௰௧

துளபமணி மார்பழகா சுகத்தைத்தாதா
சுருதியே மெய்ப்பொருளே வரத்தைத்தாதா
களபகஸ் தூரியனே கடாக்ஷந்தாதா
கஞ்சனைமுன் வென்றவனே கருணைதாதா
பழம்பொருளே சிவயோகி பாக்கியந்தாதா
பத்திமுத்தி சித்திசெய்ய வுன்பாதந்தாதா
அளவிலா மெய்ப்பொருளே கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. ௰௨

கெருடப்பத்து-முற்றிற்று.

உ

முருகன் றுணை.

## கஜேந்திரமோக்ஷக்கீர்த்தனை.

இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்

பல்லவி.

மூலமென்றழைத்த யானையைக்காத்தருள்
முகுந்தனைப்பணிநெஞ்சே.

அநுபல்லவி.

சீலமேவுபத்மாசனன் வணங்கும்
திருவரங்கத்தரவணைமிசை யுறங்கும்
நீலமேனியனைநிறைபரஞ் சோதி
நித்தியநிர்மலநிராமய ஆதி-மூல

சரணங்கள்.

மழையெனமும்மதம் பொழியும்விகடதட
மத்தகஜங்கள் கோடி-இரு
மருங்குமணியணியாய் நெருங்கித்தொடர்ந்து
வரவனத்தினில் நடந்தோட
எழுகடலாமென அலைகள்பொன்மணிகொழிக்
தெறியுமடுவைத் தேடி-வன்
டிரைக்கமலம்விண்டுசாக்குஞ் செந்தே
னிறைந்தினிக்குந்தண்புனல் நாடி
அழகோடிறங்கியதின் முழுகியே பைய
அலப்பத்துணிப்பப்பலசலக்கிரீடை செய்ய
முதலைப்பிடிக்களத்திற்கதறியே யுய்ய-மூல

## கஜேந்திரமோக்ஷக்கீர்த்தனை.                கூடு

காலனைப்போலுக்ர                மானகராவ
    கண்டகனே                டுடிவெ
காலமனுவளவும்வெறுப்புச்                சலிப்பில்லாமற்
    கடுமையே                டோடி
ஸ்தூலஸிகரமகமேரு                நிகருடனாந்
    சுப்பல்போல்                வாடிகசால்
தூவண்பேராக்கிரமங்                குழைந்துநடுங்கிவிழுந்
    சொருகிக்களை                மூடி
ஞாலவேலைதிர்த்தகீவினைப்                பாடுது
    நமக்கென்றுகலைநிரைதுதிக்சவைத்                தழுது
ஓலமிட்டண்டசராசர                முழுதும்
    உடையவனெவனவன்கதியென்று                தொழுது
அடுத்துச்செவியில்வந்து                நுழைய-அபய
    மென்னும்அந்தக்குரலைக்                கேட்டுபால்
அலைதவழாழியிற்பெரிய                பிராட்டியோ
    டாடியவிளை                யாட்டு
விடுத்துயர்கருடன்மேடி                றேறியாயிரம்படம்
    விரித்தெழுமணிச்                சூட்டுச்சேஷ
மெத்தைதுறந்துதிருமார்பிற்                பளபளென
    விளங்கியஎழில்                காட்டி
வடத்ரணிகவஸ்துவமசையப்                பொன்னுடை
    வயங்கப்பசுந்துளபப்பரிமள                வாடை
எடுத்திடவுநுவிசந்தாமரை                ஓடை
    எனச்சிறந்திடக்ஷணத்தொழிப்                பிடை
மிக்கதிர்ச்சுரியலுக்ரன்                றெரியமுங்கிடபிர
    மித்துக்கணாகள்                கடா-மூடி

# கஜேந்திரமோக்ஷக்கீர்த்தனை.

ஸ்ரீ[illegible]விக்ரநவரத்ன நெடுமகுடம்
விண்ணிடைவெளியில் வீச
எரிமணிப்பிரபைத்தாழ்வாகுவலம் மேகத்
திந்திரனுமிசை ஏகக்கையில்
ஏந்தியபாஞ்சசன்னியம் சக்கராயுத
மிலங்கிடக் கைலாச
வரையுமைசிவன்முத லோரிதுவென்ன
மாயமோவென்றிறைஞ்சித்தோத்திரம் பன்னத்
திரிமுகம்வோர்த்துளக்குறுநகை துன்ன
சித்திரமிரங்கிக்கிருபைபெருகியே மின்ன-மூல
காநினிற்குண்டலசாதியினே லிருள்
பாதலத்தன் றேட-மிகக்
ககனவர்மலர்மாரிசொரியத் தேவ
கானங்கின்னரர் பாடக்
கோதறவயிற்றில்வைத்திடு சகலாண்டமுங்
குலுங்கநான்மறை தேடச்செழுங்
கொத்துமலர்மாலை சரித்திட-அந்தர
துந்துபியொலி நீட
மாதவர்களித்தாடவேகமோடு சென்று
மரகதமலைபோலெதிர் நின்று
நீதிகைத்தஞ்சாதேயஞ்சாதே யென்று
நெறியமுதலையைக்கொன்றிடுந்தொலைத் தன்று
மூலமென்றழைத்த யானையைக்காத்தருள்
முகுந்தனைப் பணிநெஞ்சே,
கஜேந்திரமோக்ஷக்கீர்த்தனை-முற்றிற்று.

——*——

97 TO 146 PAGES MISSING IN BOOK